திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட மன்றத் தொடரிலேயே 99(2) பிரிவை அம்மாதிரி திருத்துவதற்கும், மதுரை, சென்னை போன்ற கார்ப்பரேஷன்கள் ஒரேமாதிரியான முறையில் வரி விதிக்கும் அமைப்பை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற யோசனைப்படியே இந்தச் சட்ட மன்றத்தொடர் கூட்டத்திலேயே கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தில்தான் அதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, when the Government bring forward such a legislation, will the Government also keep in mind the houses whose rental value is Rs. 100 and less and give exemption to them as the Government are giving exemption to the lands less than one ground? If such an exemption is given, rent also will not increase. Will the Government come forward to give this concession?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடுத்த வினா குடிசைகளுக்கான வரி பற்றியது. குடிசைகளைப் பொறுத்த வரையில் ஆண்டு வருமானம் ரூ. 18-ம் அதற்குக் குறைந்த அளவு வருமானம் உள்ளவைகளுக்கு வரி இல்லை என்றிருக்கிறது. ரூ. 100-ம் அதற்குக் கீழும் என்று கொண்டு வருவது என்பது பரிசீலனையில் இல்லை. ஆராய்ந்து பார்த்துத் தான் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்தால் எல்லோரும் அதற்குக் கீழ் கொண்டுவரும் முயற்சிகளைச் செய்வார்கள். அதனால் மாநகராட்சி மன்றத்திற்கும், நகராட்சி மன்றங்களுக்கும் எவ்வளவு வருமான இழப்பீடு ஏற்படும் என்பதையும் காண வேண்டும். இப்போதே உள்ளாட்சி மன்றங்களுக்கு போதிய நிதி வசதி இல்லை என்ற நிலைமை இருக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் நிதிவசதியைப் பெருக்கிக் கொள்கிற பெரும் வாய்ப்பு சொத்து வரி ஒன்றுதான். ஆகவே. இதை ஆராய்ந்துதான் செய்ய வேண்டும். ஆராய்ந்த பிறகு நஷ்டம் எதுவும் இல்லாமல் தொல்லைகள் தவிர்க்கப்படும் சூழ்நிலை இருந்தால் கவனிக்கலாம். இப்போது அப்படிப்பட்ட ஆலோசனை எதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை.

குடிசைகளுக்கான நகராட்சி வரி.

* 282 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிசைகளுக்கான நகராட்சி வரியினை நீக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை. வருடாந்திர மதிப்பீடு 18 ரூபாய்க்கு அதிகப்படாமலிருந்தால் சொத்து

வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கலாம் என 1920-ம் ஆண்டு தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் ஏற்கனவே விதி உள்ளது.

திரு. என். கிட்டப்பா : நகரங்களில் உள்ள பங்களா வாசிகளுக்கு இன்னும் வரியை அதிகப்படுத்தி வரியைத் தாங்க முடியாத குடிசைவாழ் ஏழை எளியவர்களுக்கு வரி விலக்கு அளிக்க இனியாவது அரசு வகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏழை எளியவர்களுக்கு, ஆண்டு வருமானம் ரூ. 18-ம் அதற்குக் கீழும் இருந்தால் வரிவிலக்கு அளிக்கலாம் என்றிருக்கிறது. தஞ்சை நகராட்சி மன்றம் ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். ரூ. 60-க்கு கீழேயுள்ளவர்களுக்கு விலக்கு அளிக்கவேண்டும் என்ற செயற் குறிப்பை தஞ்சை நகராட்சி மன்றம் அனுப்பி வைத்திருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போதுள்ள தன்மையில் ரூ. 18-க்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும். சொத்துக்கு உரியவர்கள் வேறு கட்டடம் அல்லது நிலம் உள்ளவர்களாகவோ, தொழில் வரி அல்லது வருமான வரி செலுத்துபவர்களாகவோ அல்லாதவர்களாக இருக்க வேண்டும். மொத்தக் கணக்கைப் பார்க்கவேண்டுமே தவிர தனித்தனியாகப் பார்த்தால் சில பேர்கள் வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடும். ஐந்து வீடுகள் இருந்து ஒவ்வொன்றுக்கும் குறைந்த அளவில் வாடகை இருக்கக் கூடும். ஆகவே மொத்தமாகக் கணக்கு பார்க்கவேண்டும். வேறு சொத்து இருக்கக்கூடாது. வேறு வரி செலுத்தாதவர்களாக இருக்கவேண்டும். தஞ்சை நகராட்சி மன்றம் அனுப்பியுள்ள குறிப்பு அரசின் பரிசிலனையில் இருக்கிறது. இழப்பு எவ்வளவு என்று கணக்கிட்டு முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. இ. எஸ். தியாகராசன்: நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிசைகளுக்கு வரி விதிப்பு இல்லை என்று அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக பஞ்சாயத்துக்கள் என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தமிழ் நாட்டு நகராட்சி மன்றங்கள் சட்டம் இருக்கிறது. மற்றப் பஞ்சாயத்துக்களில் எப்படி இருக்கிறது என்பதற்குத் தனிக்கேள்வி போட்டால் விவரங்களை அறிந்து சொல்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : ரூ 18-க்கு குறைவாகவுள்ளவர்களுக்கு விலக்கு என்றிருக்கிறது. இடத்திற்கு இடம் வாடகையின் அளவு மாறுபடுகிற நிலைமை இருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் வாடகை அதிகமாகக் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. ஆரணி போன்றயிடங்களில் அப்படி இல்லை. அங்கு ரூ 18-க்கு கீழ் வருமானம் உள்ளவர்கள் ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே இந்த ரூ. 18 என்பதை ரூ. 24 என்றளவிற்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அந்தமாதிரி ஒரு

1971 ஜூலை 17]

தீர்மானத்தை ஆரணி நகராட்சி மன்றம் ஏற்கனவே நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதை அரசாங்கம் அறியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊருக்கு ஊர் அப்படி மாறுகின்ற தன்மை இருக்கிறது. ஆரணி போன்ற இடங்களை சென்னையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதிகப் படியான விலக்குகள் ஏற்படுகிற சூழ்நிலைதான் இருக்குமே தவிர சென்னையைப் போன்றிருக்காது. ரூ. 18 என்பதை ரூ. 24 என்று செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள். இதில் அதிகமான வித்தியாசம் இல்லை. அதனால் ஏற்படுகிற நஷ்டத்தைப் பார்க்கவேண்டும். ஒரு பக்கத்தில் ஊராட்சி மன்றங்கள் தங்கள் நிதி வசதியைப் பெருக்கவேண்டு மென்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் முக்கியமான வரியை எடுத்துவிட்டால் எந்த வகையில் நிதி சேர்ப்பது என்பதையும் கவனிக்கவேண்டும். ஆகவே எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் செய்யவேண்டும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சர் அவர்கள் கூறுகிற பதில் 1920-ம் வருஷம் சட்டத்தின்படி ரூ. 18-க்குக் குறைவான வருமானம் உள்ளவர்களுக்குத் தான் விதிவிலக்கு என்று கூறினார்கள். 1920-ம் வருஷம் சட்டம் என்று சொன்னால் இன்று 50 வருஷம் ஆகிவிட்டது. இதற்கிடையில் விலைவாசிகள் எவ்வளவோ உயர்ந்து போய் எல்லாத் துறைகளிலும் உயர்த்தித் தரவேண்டுமென்று இருக்கிற நிலைமையில், சோஷலிஸக் கோட்பாடுகளை நாம் நிறைவேற்ற உறுதி பூண்டு இருப்பதால், ஏழை எளியவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில் இதையும் உயர்த்தித் தர அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆங்காங்கு இருக்கும் நிலைமைகளை ஒட்டி நகராட்சிமன்றங்கள் தங்களது கருத்துக்களை அரசுக்கு எழுதுவார்களானால், அதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 283, 284 தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா எண்கள் 285, 286 ஒருசேர எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

பஞ்சப் பகுதியென அறிவிக்கப்பட்ட வட்டங்கள்.

*285 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள எந்தெந்த தாலுக்காக்களை தற்போது பஞ்சப் பிரதேசமாக மத்திய அரசு அங்கீகரித் துள்ளது ?